29.11.2017

# பருத்தியை பதம் பார்க்கும் நோய்கள்



பருத்தி பயிரில் தண்டுக்கூன் வண்டு மற்றும் வேரழுகல் நோய் தாக்குதல் உள்ளதா என கண்காணிக்க வேண்டும். தண்டுக்கூன் வண்டு தாக்குதலால் நில மட்டத்திற்கு சற்றே மேலே அடித்தண்டுகளில் முண்டுகள் போன்ற வீக்கம் காணப்படும். இளம் பயிர் வாடிக் காய்ந்து விடும்.

தண்டுக்கூன் வண்டு தாக்குதலால் வேரழுகல் நோய் பாதிப்பு அதிகம் காணப்படும். வேரழுகல் நோய் தாக்குதலால் தண்டின் அடிப்பகுதியில் பட்டை நார் நாராக உரிந்து விடும். வேர் பகுதி முழுவதும் சிதைந்து விடும். செடியை பிடுங்கினால் எளிதில் வந்து விடும்.

## கட்டுப்படுத்தும் முறை

பருத்தி பயிரில் தண்டுக்கூன் வண்டு மற்றும் வேரழுகல் நோய் தாக்குதலின் அறிகுறிகள் தென்பட்டால், ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 மில்லி குளோர்பைரி பாஸ் மற்றும் ஒரு கிராம் கார்பன்டசிம் மருந்தை கலந்து நோய் தாக்கிய செடிக்கும், அதைச் சுற்றியுள்ள செடிகளுக்கும் வேர்ப்பகுதி நனையும்படி மருந்து கலவையை ஊற்ற

வேண்டும். 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை மருந்து கலவையை ஊற்ற வேண்டும். வயலில் நீர் தேங்காமல் பார்த்து கொள்ள வேண்டும்.

- முனைவர் **ம.குணசேகரன்**

தலைவர்
பயிர் மருத்துவ நிலையம்
ஸ்ரீவில்லிபுத்துார்.

## அழகான மாடித்தோட்டம்



தமிழகத்தில் குடும்பத்திற்கு தேவையான அன்றாட காய்கறி தேவைகளை பூர்த்தி செய்யவும், குடும்ப பட்ஜெட்டில் துண்டு விழாமல் இருக்கவும், 'டி.வி.' முன் அமர்ந்து பொன்னான நேரத்தை வீணடிக்கும் சில குடும்ப தலைவிகளை மீட்டெடுக்கும் நடவடிக்கையாகவும், அரசு கண்டுபிடித்த தொழில்நுட்பம் தான் 'மாடித்தோட்டம்'. 522 ரூபாய் மதிப்புள்ள மாடித்தோட்டம் 'கிட்' ஒன்றுக்கு 200 ரூபாய் அரசு மானியம் வழங்குகிறது. கிட் ஒன்றில் தென்னை நார் கழிவுடன் கூடிய வளர் ஊடகம் அடங்கிய ஆறு பைகள், அேஸாஸ்பைரில்லம் 200 கிராம், பாஸ்போ பாக்டீரியா 200 கிராம், சூடோமோனாஸ் 100 கிராம், டி.விரிடி 100 கிராம், நீரில் கரையும் உரம் 18:18:18 ஒரு கிலோ, அசார்டிராக்ஷன் 100 மில்லி, திட்ட விளக்க குறிப்பு, பத்து வகையான காய்கறி விதைகள் ஆகியன இடம் பெற்றிருக்கும்.

**நீர் மேலாண்மை**

செடிகள் வளர்ப்பதற்கு ஏற்றவாறு உள்ள பைகளில் செடிகளை வளர்க்கும் போது மிகவும் கவனம் தேவை. தேங்காய் நார் கழிவு ஊடகம், செடிகள், பருவநிலை, பைகளின் அளவு, செடியின் வளர்ச்சி ஆகியவற்றை மனதில் கொண்டு அதற்கேற்றவாறு நீரை பாய்ச்ச வேண்டும்.

**உரமிடுதல்**

நீரில் எளிதில் கரையக்கூடிய செயற்கை உரங்களை ஒரு தேக்கரண்டி வீதம் இளம் பருவத்திலும், இரண்டு தேக்கரண்டி வீதம் பூக்கள் பூக்கும் தருணத்திலும், பழங்கள் பெருக்கம் அடையும் நேரத்தில் தேங்காய் நார் கழிவு கலவை மீது இட வேண்டும். பின் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

**குச்சி ஊன்றுதல்**

காற்றின் வேகம் தாங்காமல் மிகவும் உயரமாக வளரக்கூடிய செடிகள் முறிந்து விடும். அதனால் சிறிய குச்சிகளை செடிக்கு அருகில் ஊன்றி கயிற்றால் கட்ட வேண்டும்.

**களை அகற்றம்**

களைகள் தென்படும் போது அவற்றை உடனடியாக எடுக்க வேண்டும். களைகள், காய்கறி செடிகளுடன் சத்துக்கள் மற்றும் இடங்களுக்கு போட்டியிட்டு செடிகளின் வளர்ச்சியை பாதிக்கும்.

**பூச்சி அழிப்பு**

சாறு உறிஞ்சும் பூச்சிகளான அசுவணி, மாவுப்பூச்சி, தத்துப்பூச்சி, இலைப்பேன் ஆகியவை செடிகளின் ஆரம்ப வளர்ச்சியை அதிகமாக பாதிக்கிறது. இதனை கட்டுப்படுத்த பூண்டு, இஞ்சி மற்றும் பச்சை மிளகாய் கரைசல் கொண்டு செடிகளின் மீது வாரத்திற்கு ஒரு முறை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**நோய்கள்**

நோய் வராமல் தடுக்க டிரைகோடெர்மா விரிடி, சூடோமோனாஸ் போன்ற நுண்ணுயிர் கொல்லிகளை பயிர் செய்வதற்கான கலவையை தயார் செய்யும்போது சேர்த்து கலக்க வேண்டும். ஒரு பைக்கு 100 கிராம் வேப்பம் புண்ணாக்கு என்ற விகிதத்திலும் மற்றும் 10 மில்லி மாட்டு கோமியத்தை செடிகளின் மீது தெளித்து

இயற்கை முறையிலும் நோய்களை கட்டுப்படுத்தலாம்.

**அறுவடை**

உண்பதற்கு ஏற்றவாறு உள்ள நிலையை அடையும் போது காய்கறிகளை அறுவடை செய்யலாம்.

**நேர்த்தி முறை**

அறுவடை முடிந்த பின் செடிகளை வளர்ப்பதற்காக பயன்படுத்திய பைகளில் உள்ள ஊடகத்தை ஒரு இடத்தில் ஒன்று சேர்த்து கட்டிகள் எதுவும் இல்லாதவாறு உடைத்த பிறகு நன்கு கிளற வேண்டும். இத்துடன் 20 கிலோ தென்னை நார் கழிவு மற்றும் 10 கிலோ மக்கிய தொழு உரம் ஆகியவற்றை சேர்த்து நன்கு கிளறிய பின் பாலிதீன் பைகளில் நிரப்பி மீண்டும் பயன்படுத்தலாம். மானிய விலையில் மாடித்தோட்டம் அமைக்க வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம்.

**- ஜி.பூபதி**

துணை இயக்குனர், தோட்டக்கலை, மதுரை.

## கரும்பில் குறும்பு செய்யும் பூச்சிகள்



கரும்பு சாகுபடியில் நோய் கட்டுப்பாடு முக்கியம். தாமதம் ஏற்பட்டால் உழவடை கூலி கூட கிடைக்காது. கரும்பு பயிரை தாக்கும் இளம் குருத்துப்புழுவை கட்டுப்படுத்த கிரேனுலோசஸ் வைரஸ் கரைசலை ஏக்கருக்கு 100 மில்லி மற்றும் 100 மில்லி

டீப்பாலுடன் நடவு செய்த 35 மற்றும் 50 வது நாளில் மாலை நேரங்களில் 200 லிட்டர் நீரில் கரைத்து தெளிக்க வேண்டும். 10 கிலோ வேப்பங் கொட்டை தூளை 10 நாள் ஊர வைத்து 200 லிட்டர் நீரில் கரைத்து தெளிக்க வேண்டும். காய்ந்த குருத்துக்களை சேகரித்து அழிக்க வேண்டும். விளக்குப்பொறி வைத்து, தாய் அந்துப் பூச்சிகளை சேகரித்து அழிக்க வேண்டும்.

**ஒட்டுண்ணி கட்டுதல்**

ஏக்கருக்கு ஒரு சி.சி., வீதம் டிரைகோ கிராமா கைலானிஸ் முட்டை ஒட்டுண்ணியை 15 நாட்கள் இடைவெளியில் ஆறு முறை கட்ட வேண்டும். நடவு செய்த 150 மற்றும் 210 வது நாட்களில் காய்ந்த தோகைகளை அப்புறப்படுத்த வேண்டும். 10 கிலோ வேப்பங் கொட்டை சாறு அல்லது ஒரு லிட்டர் வேப்ப எண்ணெய், நான்கு கட்டி கதர் சோப்பு ஆகியவற்றை 200 லிட்டர் நீரில் கரைத்து தெளிக்கலாம்.

***கரிப்பூட்டை நோய்***

நோய் தாக்கப்பட்ட குருத்துக்களை பிடுங்கி எரிக்க வேண்டும். 200 கிராம் கரையும் கந்தகத்தை 200 லிட்டர் நீரில் கரைத்து தெளிக்க வேண்டும். கரும்பில் 100 டன் மகசூல் பெற கரும்பு தோகையை உரித்த பின் வெற்றிலை கொடிக்கால் போன்று, குச்சிகளை கொண்டு கரும்பு சாயாமல் விட்டம் கட்டினால் 100 முதல் 110 டன் மகசூல் கிடைக்கும். தொடர்புக்கு 95786 69455.

**- வெ.ரெங்கசாமி**

ஓய்வு உதவி வேளாண் அலுவலர் திருச்சி.

## வறட்சிக்கு ஏற்ற மரவள்ளிக்கிழங்கு சாகுபடி ஏக்கருக்கு20 டன் அள்ளலாம்

தென்மாவட்டங்களில் தொடர்ந்து வறட்சி நிலவுவதால் எதிர்பார்த்த விளைச்சல் இல்லை. வறட்சியை தாக்குப்பிடித்து வளரும் மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் சிவகங்கை மாவட்டம் காளையார்கோயில் சூசையப்பர்பட்டினம் விவசாயி எஸ்.ஜோசப் ஆரோக்கியசாமி கவனம் செலுத்தி வருகிறார்.
மரவள்ளிக்கிழங்கு சாகுபடியில் அதிக மகசூல் குறித்து ஜோசப் ஆரோக்கியசாமி கூறியதாவது: வறட்சியான மாவட்டங்களில் சிவகங்கையும் ஒன்று. ஏற்கனவே குடிநீர்

கூட கிடைக்காமல் பஞ்சம் நிலவுகிறது. சொட்டு நீர் பாசன முறையில் மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்கிறேன்.
நல்ல லாபம் கிடைப்பதால் இரண்டு ஆண்டுகளாக தொடர்ந்து மரவள்ளிக் கிழங்கையே பயிரிட்டு வருகிறேன். இந்த ஆண்டு 60 சென்டில் பயிரிட்டுள்ளேன்.
நாமக்கல், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களில் மழை குறைவான பகுதிகளில் மரவள்ளி கிழங்கு அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. தொடர்ந்து சிவகங்கை மாவட்டத்திலும் வறட்சி நிலவுவதால் கிணறுகள் வறண்டு வருகின்றன. அதிக நீர் தேவையுள்ள நெல், வாழை போன்ற பயிர்களை சாகுபடி செய்ய முடியவில்லை.

இதனால் வறட்சியை தாங்கி வளரும் மரவள்ளிக் கிழங்கை சாகுபடி செய்கிறோம். குங்குமரோஸ், முள்ளிவாடி, வெள்ளைக்கிழங்கு போன்ற ரகங்கள் உள்ளன. இந்த கிழங்கு மூலம் ஜவ்வரிசி, பசை, சிப்ஸ், ஸ்டார்ச் போன்ற பல வகையான பொருட்கள் தயாரிக்கின்றனர்.
தமிழகம் மட்டுமின்றி வெளிநாடுகளிலும் நல்ல வரவேற்பு உள்ளது. அரை அடி நீளமுள்ள மரவள்ளி குச்சியை ஒரு இஞ்ச் ஆழத்தில் நட வேண்டும். ஏக்கருக்கு 5 ஆயிரம் குச்சிகள் நடலாம். மாதத்திற்கு இரண்டு முறை நீர் பாய்ச்சினால் போதும். பராமரிப்பு செலவும் குறைவு. கடலை, வெங்காயம், உளுந்து போன்றவற்றை ஊடு பயிராகவும் பயிரிடலாம்.
எட்டு முதல் பத்து மாதங்களில் மரவள்ளிகிழங்கை பறிக்கலாம். ஒரு செடியை பறித்தால் 4 முதல் 7 கிலோ வரை கிழங்கு கிடைக்கும். பறித்த குச்சியை மீண்டும் சாகுபடிக்கு பயன்படுத்தலாம். ஏக்கருக்கு 15 முதல் 20 டன் வரை கிடைக்கும். தற்போது வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ 30 ரூபாய் வரை விற்கப்படுகிறது. நாங்கள் ஈரோடு தொழிற்சாலைக்கு அனுப்புகிறோம். கிலோ 8 முதல் 10 ரூபாய்க்கு எடுத்து கொள்கின்றனர். ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே செலவாகும், என்றார். தொடர்புக்கு, **84897 85434.**

**- இ.ஜெகநாதன்**
சிவகங்கை.

## 'அலைகடல் ஓடு' 'திரவியம் தேடு'



இந்திய மீன் வளத்தில் தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளது. கடல் மீன் வளம், உள்நாட்டு மீன் வளம், உவர் நீர் மீன் வளம் என மூன்றாக பிரிக்கப்பட்டுள்ளது. மீன் வளத்துறை 2016 - 17 ல் 80 ஆயிரம் மெட்ரிக் டன் மீன்களை ஏற்றுமதி செய்து ரூபாய் 4,000 கோடி அந்நிய செலாவணியை ஈட்டித் தந்துள்ளது.

13 மாவட்டங்களை உள்ளடக்கி, 1,076 கி.மீ., நீள கடல் கரையை பெற்று நாட்டின் இரண்டாவதாக தமிழகம் விளங்குகிறது. 10 லட்சம் மீனவர்கள் 608 கிராமங்களில் வசிக்கின்றனர். 4.72 லட்சம் டன் ஆண்டு தோறும் மீன் உற்பத்தி நடக்கிறது. மீன் பிடி விசைப்படகுகள் 5,861. நாட்டுப்படகுகள் 35,666 உள்ளன.

சென்னை, தூத்துக்குடி, சின்ன முட்டம், குளச்சல், முட்டம் என ஐந்து மீன் பிடி துறைமுகங்கள், தேங்காய்பட்டினம், பூம்புகார், முக்கையூர் என கட்டுமான பணிக்கான மூன்று மீன் பிடி துறைமுகங்கள், பழையாறு, மல்லிப்பட்டினம், கடலூார், நாகை என நான்கு நடுத்தர மீன் பிடி துறைமுகங்கள், 36 எண்ணிக்கையில் மீன் இறங்கு தளங்கள் மற்றும் படகு அணையும் தளங்கள், 254 மீன் இறங்கு மையங்கள் உள்ளன. மீன்

பிடிக்க, வளர்க்க, ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று விரும்புவோர் www.tn.gov.in/fisheries, www.india.gov.in / agriculture and farmers welfare ல் தொடர்பு கொள்ளலாம்.

**- எம்.ஞானசேகர்,**

விவசாய ஆலோசகர், சென்னை.

தினமணி

## நெல் பயிருக்கு காப்பீடு செய்ய நாளை கடைசி நாள்



சம்பா நெல் பயிர் காப்பீடு செய்வதற்கு வியாழக்கிழமை (நவ.30) கடைசி நாளாகும் என கடலூர் மாவட்ட ஆட்சியர் பிரசாந்த் மு.வடநேரே தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: சம்பா நெல்பயிருக்கு பயிர்க் காப்பீடு செய்வதற்கு அரசாணை வெளியிடப்பட்டு விவசாயிகள் பயிர்க் காப்பீடு செய்து வருகின்றனர். வரும் 30-ஆம் தேதி கடைசி நாளாகும்.

மாவட்டத்தில் உள்ள 168 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 85 பொதுச் சேவை மையங்கள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பயிர்க் காப்பீடு செய்து கொள்ளலாம்.

ஒரு ஏக்கர் நெல் பயிருக்கு ரூ.390 பிரீமியத் தொகையாகும். முன்மொழிவு படிவம்,

சமீபத்தில் எடுக்கப்பட்ட சிட்டா, நடப்பு சம்பா பருவத்துக்கான அடங்கல், வங்கி சேமிப்புக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகிய ஆவணங்களை எடுத்துச் செல்ல வேண்டும். தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ஏற்கெனவே பெற்ற கடன் தொகை நிலுவையில் உள்ள விவசாயிகளும் தங்களை கடன் பெறாத விவசாயியாக பயிர்க் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்து கொள்ளலாம். பொதுச் சேவை மையங்களைப் பொறுத்தவரை, கடன் பெறாத விவசாயிகள் கூட்டுறவு வங்கி அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்கள் காப்பீடு செய்து கொள்ளலாம்.

பயிர்க் காப்பீடு தொடர்பான சந்தேகங்களுக்கு தங்களது பகுதி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணான 1077 இல் தொடர்பு கொள்ளலாம். கடன் பெறாத விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.390 பிரீமியத் தொகையை செலுத்தி காப்பீடு செய்துகொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஊர் கூடி உழவு...! தலைமுறைகளைக் கடந்தும் தழைத்தோங்கும் விவசாயம்



கிருஷ்ணகிரியை அடுத்த அவதானப்பட்டி கிராமத்தில் நெல் அறுவடை பணியில் ஒன்று கூடி ஈடுபட்ட உறவினர்கள்.

மரபு கலாசாரங்களும் வாழ்வியல் நெறிகளும் மாற்றம் காணும் மானுடவியலில், இன்னும் மாண்புற செழிக்கும் பழைமை மாற உழவு களப் பணியில் உறவுகள் சங்கமிக்கும் களமாக அவதானப்பட்டி கிராமம் திகழ்கிறது.

இயந்திர வாழ்வியலின் ஏணிப்படிகளை உச்சம் தொட முடியாமல் கூட்டு குடும்ப வாழ்க்கை மறைந்து வரும் நிலையில், கிருஷ்ணகிரி அருகே பல தலைமுறைகளாக விவசாயத்தில் உற்றார், உறவினர்கள் ஒன்று கூடி தங்களது பங்களிப்பை அளித்து வரும் ஒரு அதிசய கிராமமாக அவதானப்பட்டி கிராமம் திகழ்கிறது.

வேளாண்மை நமது நாட்டின் முக்கிய தொழிலாக இருந்து வரும் நிலையில், நமது கலாசாரத்தின் வெளிப்பாடாக கூட்டுக் குடும்பம் இருந்து வந்தது. கூட்டுக்

குடும்பத்தின் தலைவர் மற்றும் அவரது உறவினர்களான சித்தப்பா, மாமன், மச்சான், அவர்களின் வாரிசுகள், பெண்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் ஒன்று கூடி விழா போன்று விவசாயப் பணிகளில் ஈடுபட்டு வந்தனர். பொருளாதார பரிணாமம், கடும் வறட்சி போன்ற காரணங்களால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதையடுத்து விவசாயிகளின் வாரிசுகள் வாழ்வாதாரம் தேடி மாற்று பாதையில் செல்லத் தொடங்கினர். இதையடுத்து கூட்டுக் குடும்பம் சிதைந்தது.

இத்தகைய சூழ்நிலையில், கிருஷ்ணகிரியை அடுத்த அவதானப்பட்டி கிராமத்தில் உறவினர்கள் பங்களிப்புடன் பல தலைமுறைகளாக தொடர்ந்து விவசாயப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அவதானப்பட்டி கிராமத்தில் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டு முழுவதும் பசுமை போர்த்தியது போல் பச்சை பசேல் என காட்சி அளிக்கும். கால்வாய் பாசனம் மூலம் இங்கு விவசாயம் நடைபெறுகிறது. ஆண்டுக்கு இரண்டு போகம் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விவசாயம் செய்வோர் சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆவர். ஒவ்வொரு ஆண்டும் நாற்று நடும் பணி தொடங்கியவுடன் அத்தை, மாமா, மச்சான், தம்பி, அண்ணன், சித்தப்பா, பெரியப்பா என உறவினர்கள் ஒன்று கூடி நாற்று நடவு பணியில் ஈடுபடுகின்றனர். பெரியப்பாவின் விளை நிலத்தில் நடவு பணியில் ஈடுபடும் உறவினர்கள், அடுத்த அனைத்து உறவினர்களும் ஒன்று கூடி மற்றொரு உறவினரின் விளை நிலத்தில் நாற்று நடவு பணியில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு திட்டமிட்டு அனைவரும் ஒன்று கூடி மகிழ்ச்சியுடன் தேர் திருவிழா போல் விவசாயப் பணிகளில் ஈடுபடுகின்றனர். ஒரு வாரத்திலேயே 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நாற்று நடவு பணியை நிறைவு செய்கின்றனர். அதேபோல், அறுவடை பணியையும் ஒன்று கூடி மேற்கொள்கின்றனர்.

அவதானப்பட்டியைச் சேர்ந்த திலகவதி (35) என்ற பெண் விவசாயி கூறும்போது, பல தலைமுறைகளாக  அவதானப்பட்டி கிராமத்தில் உறவினர்கள் ஒன்று கூடி விவசாயப் பணிகளில் ஈடுபடுகின்றனர். அவதானப்பட்டியைச் சுற்றி உள்ள நெக்குந்தி, சின்னமுத்தூர், நேருபுரம், சிப்பாயூர், பனந்தோப்பு மற்றும் அதை சுற்றியுள்ள 10-க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள உறவினர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் நெல் நாற்று நடவு, அறுவடை போன்ற பணிகளை மேற்கொள்வோம். எங்களிடம் பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், விவசாயப் பணியில் ஒற்றுமையுடன் மகிழ்ச்சியுடன் இந்தப் பணியில் ஈடுபடுகிறோம்.  தற்போது அருகில் உள்ள கிராமத்திலிருந்து எனது தம்பி, அறுவடை பணிக்காக வந்துள்ளதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

நெக்குந்தியைச் சேர்ந்த விவசாயி சின்னசாமி(57) தெரிவித்தது: கடந்த காலங்களில் உறவினர்கள் ஒன்று கூடி விவசாயப் பணிகளில் ஈடுபடுவது திருவிழா போல இருக்கும். வறட்சியின் காரணமாக பாம்பே, கல்கத்தா, பெங்களூரு போன்ற அண்டை மாநிலங்களுக்கு பிழைப்பு தேடி சென்றவர்கள், நெல் நாற்று நடவு, அறுவடை பணி காலங்களில் தங்களது கிராமத்துக்கு திரும்புவது வழக்கம். தற்போதைய நிலையில், விவசாய தொழிலாளர்கள் பற்றாக்குறை உள்ள நிலையில் உறவினர்கள் ஒன்று கூடி விவசாயப் பணிகளில் ஈடுபடுவது  ஆரோக்கியமானதாக உள்ளது. ஆனால், தற்போது இந்த மரபு மெல்ல குறைந்து வருகிறது என வருத்தத்துடன் தெரிவித்தார்.

இருந்தாலும், தங்களது குடும்பத்துக்குள் இந்த பணி தொடர்ந்து நடைபெறுவது மகிழ்ச்சியாக உள்ளது.  பல தலைமுறைகளாக  உறவினர்கள் ஊர் கூடி விவசாயப் பணியில் ஈடுபடுவது நமது கலாசாரத்தை கட்டிக் காக்கும் கிராமமாக அவதானப்பட்டி கிராமம் திகழ்கிறது.